MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# திருக்குறளில் கல்வியியல் சிந்தனைகள்

முனைவர். ப. விக்னேஸ்வரி
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,
நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் – 105
கைப்பேசி : 99765 76871
மின்னஞ்சல் : vigneshwari.cbe@gmail.com

ஆ. பிரபாகரன்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை ,
நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் – 105
கைப்பேசி : 9159706380

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

# Educational Thoughts in Thirukkural

**Dr. P. Vigneshwari**
**Associate Professor, Department of Tamil**
**Nehru Arts and Science College (Autonomous),**
**Affiliated to Bharathiar University, Coimbatore, Tamil Nadu, India.**
**Gmail: nascvigneswari.p.@nehrucolleges.com**
**ORCID: https://orcid.org/0000-0001-5023-1091**

**A. Prabakaran**

**Ph.D. Research Scholar RegistrationNumber: B1/TAM23PDEC0362/2023**
**Department of Tamil, Nehru Arts and Science College. (Autonomous),**
**B. Affiliated to Bharathiar University, Coimbatore, Tamil Nadu, India.**
**C. Gmail: nitprabakaran.a@nehrucolleges.com.**
**D. Phone:9159706380**
**E. ORCID: https://orcid.org/0009-0009-3989-1529**

## Abstract

Thirukkural, which emerged in ancient times, even before the era symbolized by stone and soil, holds the foremost place in literature and adds distinction to the Tamil language. Preserved through the ages and regarded as one of the great moral texts, Thirukkural is a universal treasure. In Tamil literature, it stands as a symbol of civilization and culture. Although many literary works have appeared from the Sangam period to the present day, moral literature has always occupied a special place among them. The aim of this article is to examine the perspectives on education, the state of education in the past and present, the importance of education, and the consequences of illiteracy. Education then and now, the importance of education, and the consequences of illiteracy.

Keywords: Education, Life, Specialization, Property, Qualification

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

## ஆய்வுச் சுருக்கம்

பண்டைய காலத்தில் தோன்றிய திருக்குறள், இலக்கியத்தில் முதன்மை இடத்தைப் பெற்று, தமிழ் மொழிக்குச் சிறப்பு சேர்க்கிறது. யுகங்கள் தோறும் பாதுகாக்கப்பட்டு, மாபெரும் அறநெறி நூல்களில் ஒன்றாகக் கருதப்படும் திருக்குறள், ஒரு உலகளாவிய பொக்கிஷமாகும். தமிழ் இலக்கியத்தில், அது நாகரிகம் மற்றும் பண்பாட்டின் சின்னமாகத் திகழ்கிறது. சங்க காலம் முதல் இன்று வரை பல இலக்கியப் படைப்புகள் தோன்றியிருந்தாலும், அறநெறி இலக்கியம் அவற்றுக்கிடையே எப்போதுமே ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த இடத்தைப் பிடித்துள்ளது. கல்வி குறித்த கண்ணோட்டங்கள், கடந்த காலத்திலும் தற்காலத்திலும் கல்வியின் நிலை, கல்வியின் முக்கியத்துவம் மற்றும் எழுத்தறிவின்மையின் விளைவுகள் ஆகியவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திறவுச் சொற்கள்:

**கல்வி, வாழ்க்கை, சிறப்பு, சொத்து, தகுதி**

## முன்னுரை

மனித வாழ்க்கை என்பது கிடைத்தற்கரிய ஒன்று. அவ்வாழ்க்கை இன்பமயமானதாக இருக்க வேண்டுமானால் மனிதர்கள் ஒவ்வொருவரும் தாமும் இன்பமாக இருந்து மற்றவர்களையும் இன்பமாக இருக்கச் செய்யவேண்டும் என்கிறார் வள்ளுவர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

மனிதர்கள் அனைவரிடமும் அன்புடனும், பணிவுடனும், பழகுவதோடு இனிமையான சொற்களையும் பேசவேண்டும். பிறப்பு முதல் இறப்பு வரை ஒரு மனிதனுக்குத் துணையாக வருவது தான் கற்ற கல்வி மட்டுமே. அக்கல்வியை உள்ளத்தில் ஏற்றி அறியாமை என்ற அக இருளைவிரட்ட துணை புரிவது கல்வி என்கிறார் வள்ளுவர். இத்தகைய கல்வியின் பயன்கள், நன்மைகள், சிறப்புகள் குறித்து_திருக்குறளில் கல்வியியல் சிந்தனைகள் என்ற தலைப்பில் இக்கட்டுரை ஆராய்கிறது.

## கல்வி:

கல்வி என்ற தமிழ்ச்சொல் 'கல்' என்ற வேர்ச் சொல்லிருந்து வந்துள்ளது. கல்வி என்ற சொல்லிற்கான ஆங்கிலச் சொல் 'Education' என்பதாகும். இந்தச் சொல் 'educatio' என்ற இலத்தின் மொழிச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இந்த 'educatio' சொல்லானது வளர்த்தல் என்ற பொருளைக் குறிக்கும் சொல்லாகும். 'Education' என்ற சொல் கற்பித்தல், பயிற்றுவித்தல் என்னும் பொருளைத் தரும் 'educo' என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டது.

இந்தச் சொல்லிற்கு ஒத்த சொல் வெளிக்கொணரல், உயர்த்திவிடல், முன்னேறிவிடல் போன்ற பொருளைத் தரும் 'educo' என்பதாகும். எனவே கல்வி என்பது தகுந்த சூழ்நிலையை உருவாக்கி மனிதர்களின்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

உள்ளார்ந்த தகுதிகளை வெளியில் கொண்டு வருவதாகும். கல்வி என்ற சொல்லுக்கு கிரியாவின் தற்கால தமிழ் அகராதி முறைப்படுத்தப்பட்ட “அறிவு, படித்து பெரும் அறிவு“ என்று விளக்கம் கூறுகிறது.

கல்வி என்பது உயர்நிலைக்குக் கொண்டு செல்லக்கூடிய ஒரு ஆயுதம். அறியாமை அகற்றும் மந்திரக்கோல். கற்றால் மட்டும் போதாது அதன் வழியில் நடக்க வேண்டும் என்பதனை,

“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு

மாடல்ல மற்றவை எவை” (திருக். 400)

என்கிறார். மேலும் தோண்டத் தோண்ட நீர் ஊற்றாய் ஊறுவது போல கற்க கற்கத் தான் அறிவு வளரும் என்று அய்யன் வள்ளுவர் கூறுகிறார்.

“ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்” (உலகநீதி.1)

“இளமையில் கல்” (ஆத்திசூடி 29)

‘’எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்” (கொ.வேந்தன் 91)

“கல்வி கரையில கற்பவர் நாள்

சில மெல்ல நினைக்கின் பிணிபல” (நாலடி. 135)

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

என்று கல்வின் அவசியத்தை நீதி நூல்கள் வலியுறுத்துகின்றன. ஏராளமான செல்வத்தைப் பிள்ளைக்கு தருவதிலும் சீரானது கல்வி மட்டும் தான். எவ்வளவு செல்வந்தராக இருந்தாலும், தான் கற்ற கல்வியைச் சொத்தாகக் கொடுக்கவும் முடியாது, பெறவும் முடியாது. ஆதலால் தான் கல்வி சிறப்பு வாய்ந்த அணிகலன்களாக கருதப்படுகின்றது என்பதனை,

“அரும்பரிசு ஆயிரம் கொடுத்தாலும்

பிள்ளைக்கு பெரும் பரிசு கல்வி”

என்ற வரிகள் உணர்த்துகின்றன.

“மன்னனும் மாசற கற்றோனும் சீர்தூக்கின்

மன்னனின் கற்றோன் சிறப்புடையவன்

மன்னருக்கு தன் தேசம் அல்லாமல் சிறப்பில்லை

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு” (மூது. 26)

என்ற வரிகள் மன்னன் தன் நாட்டிற்கு மட்டுமே சிறப்பு வாய்ந்தவன். ஆனால், கற்றவருக்கு தேசம் எல்லாம் சிறப்பாகும்.

கல்வி ஏழைகளுக்குச் செல்வமாகவும், பணக்காரர்களுக்கு அணிகலன்களாகவும், வீட்டிற்கு விளக்காகவும், நாட்டிற்கு நன்மை

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

உண்டாக்கும் சொத்தாகவும் இருக்கிறது. பிறப்பு முதல் இறப்பு வரை ஒரு மனிதனுக்கு துணையாக வருவது தான் கற்ற கல்வியை என்பதனை,

“ஒருமைக்கண்தான் கற்று கல்வி ஒருவருக்கு

எழுமையும் ஏமாப்பு டைத்து”

என்ற குறட்பாவின் மூலம் அய்யன் திருவள்ளுவர் அழகாக எடுத்துரைத்துள்ளார்.

“வெள்ளத்தால் போகாது வெந்தனலால் வேகாது

வேந்தனால் சொல்லத்தான் ஆகாது” (விவே. சிந்)

என்ற வரிகள் கல்வியின் அவசியத்தை போதிக்கின்றன.

என்ற இலக்கிய வரிகள் கற்றோரின் சிறப்புகளைப் பறைசாற்றுகின்றன. கற்றதோடு மட்டும் நிற்காமல் அந்நூல்கள் காட்டிய வழியில் சென்று கல்வி கற்பது தான் கற்றோரின் கடமை. படிப்பதன் மூலமும் படித்த படி நடப்பதன் மூலம் சிறப்புப் பெறலாம்.

## கல்வியின் நிலை அன்றும் இன்றும்:

கல்வித்துறையில் தற்போது இருக்கும் வாய்ப்புகள் மற்றும் வளர்ச்சிகள் அக்காலத்தில் இல்லை.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

மக்கள் தனிப்பட்ட முறையில் ஆசிரியர்களுக்குப் பொருள் கொடுத்தும், தொண்டு செய்தும் கல்வி கற்று வந்துள்ளனர். இதனைப் புறநானூறு,

“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே” (புறம்.183)

என்று கூறுகிறது.

திருக்குறள் எல்லாக் காலத்திற்கும் பொருந்தும் வகையில் செய்திகளை உள்ளடக்கி உள்ளது. இந்திய அரசு கிபி இரண்டாயிரம் ஆண்டில் தான் அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தைத் துவங்கியது. ஆனால், திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கற்க, என்ற வார்த்தையின் வழியாக அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்ற உத்தரவை உலக மக்களுக்கு அன்றே வலியுறுத்தியுள்ளார். அனைவரும் கற்கின்ற கல்வியைப் பிழையில்லாமல் ஆராய்ந்து பயில்வது முக்கியமான ஒன்று. கல்வியை நல்ல முறையில் பயின்ற பின் அந்தக் கல்வி சொன்ன வழியில் நடக்க வேண்டும் என்பதனை,

கற்க கசடற கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக” (திருக். 391)

என்ற குறள் மூலம் அழகாகத் தெளிவுபடுத்தியுள்ளார். **MARCH - APRIL**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

## கல்வியின் சிறப்பு:

பணம், பொருள், ஆவணங்கள் போன்ற எல்லாச் செல்வங்களும் இயற்கையின் பேரிடர்களால் அழிந்து போகும் தன்மையை உடையன. இவ்வுலகில் அழியாச் செல்வம் ஒன்று இருக்கிறது என்றால் அது கேள்விச் செல்வமாகிய கல்விச்செல்வம் என்பதனை,

"கேடில் விழுந்து செல்லும் கல்வி ஒருவருக்கு
மாடல் மற்றவை யாவை" (திருக். 400)

அழிவில்லாச் சிறப்பை உடைய செல்வம் கல்வி ஒன்று தான், மற்ற அனைத்துச் செல்வங்களும் அழிந்துவிடும். என்பதனை உணர்த்தியுள்ளார். மேலும்,

"தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமறுவர் கற்றறிந் தார்" (திருக். 399)

கல்வியால் மற்றவர்களை இன்பம் அடையச் செய்ய இயலும் என்பதனை இக்குறள் வாயிலாகக் குறிப்பிடுகிறார்.

## கல்லாததினால் ஏற்படும் விளைவுகள்:

நம் உடல் உறுப்புகளில் முக்கியமான ஒன்று கண். தவழ்கின்ற

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

மேகம், சுட்டெரிக்கின்ற சூரியன், நட்சத்திரங்கள், உலக அதிசயங்கள், இயற்கை, சுற்றுப்புறச்சூழல் இவற்றைக் கண் கொண்டு ரசிக்க முடியும். இவற்றைக்காண மட்டும் கண்கள் முகத்தில் படைக்கப்படவில்லை. கல்வியறிவு இல்லாதவர்களுக்கு கண் இருந்தும் அவை முகத்தில் உள்ள புண்கள் என்பதனை,

“கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையர் கல்லாதவர்” (திருக். 393)

என்ற குறள் மூலம் அழகாகத் தெளிவுபடுத்தியுள்ளார்.

## முடிவுரை

ஒரு மனிதனுக்கு துணையாக வருவது தான் கற்ற கல்வியே ஆகும். உள்ளத்தில் அறியாமை என்ற அக இருளைவிரட்ட கல்வி அவசியம் வேண்டும். யாரெல்லாம் இன்று புத்தகங்களை நோக்கி தலை குனிகிறார்களோ அவர்களை நாளை இந்த உலகமே போற்றும். இன்று தலைக்குனிந்து படிப்பதெல்லாம் நாளை தலை நிமிர்ந்து வாழ்வதற்கே இன்று இமை விழித்து கற்பதெல்லாம் நாளை சுமை ஒழிந்து வாழ்வதற்கே இன்று விரல் வழியில் எழுதுவதெல்லாம் நாளை குறள் வழியில் வாழ்வதற்கு என்பதனை மாணவர்கள் மனதில் விதையாக முளைவிட்டு

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

வெற்றி என்ற கனியைப் பறிக்க மனதில் விதையாக விதைக்க வேண்டும் என்பதனை திருக்குறளில் கல்வியியல் சிந்தனைகள் என்ற கட்டுரைத் தெளிவுபடுத்துகிறது

## துணை நூற்பட்டியல்

1. சங்கப் புலவர்கள் , சங்க இலக்கியம்

கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை.

2. கொன்றைவேந்தன் – ஔவையார்

3. ஶ்ரீ. சந்திரன். ஜெ. சிலப்பதிகாரம் மூலமும் தெளிவுரையும், தமிழ் நிலையம், சென்னை, 2012.

4. பரிமேலழகர் உரை - திருக்குறள் - சாரதா பதிப்பகம் - சென்னை –2002

5. புலியூர்க் கேசிகன் - நாலடியார் (தெளிவுரை) - சாரதா பதிப்பகம் – சென்னை – 2019